## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

OS No. 31/2012 19.04.2021 DW1

பெயர் : தங்கவேல் த/பெ.பெருமாள்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி – பி.வா.சா. 1**

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட கால கட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸ்ட்) கட்சியில் பொறுப்பில் இருந்த நபர்கள் மீது அவர்கள் பொறுப்புகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கினை பொறுத்து மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து நான் பதில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் கட்சி பொறுப்பில் இருந்தவர்கள் தற்போது வேறு பொறுப்புக்கு மாறிவிட்டார் என்றால் சரிதான். தற்போது யார்யார் என்ன பொறுப்பில் உள்ளனர் என்பது பொறுத்து நாங்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அருணாச்சலம் மற்றும் வேல்முருகன் ஆகிய 4 மற்றம் 5 பிரதிவாதிகள் வழக்கு பின்னிட்டு இறந்துவிட்டார் என்றால் உண்மை. தனியாள் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் அவர்களது வாரிசுகள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என குறிப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அது பதிவாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து கட்சி சொத்து என்பதால் வாரிசுகளை சேர்க்கவில்லை என்று நான் சொல்கிறேன்.இதுபோல் தகவல் ஏதும் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியிருக்கிறேன். எழுத்துபூர்விமாக சொன்னேனா என்றால் எனக்கு நினைவில்லை. கட்சியில் உறுப்பினராக மட்டுமே உள்ளேன். எனக்கு பின்னிட்டு சேலம் மாவட்ட குழு செயலாளர் யார் பதவி வகித்தார், வகிக்கிறார் என்ற விவரங்களை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. அதேபோல் மேட்டுர் நகர , கொளத்துார் ஒன்றிய செயலாளராக யார் பதவி வகித்தார், வகிக்கிறார்

என்ற விவரங்களை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அதுவும் நினைவில்லை. 3ம் பிரதிவாதியை பொறுத்து கட்சியை விட்டு நீக்கியதாக சொல்லியுள்ளேன். அவருக்கு பதிலாக வேறு யார் உள்ளார்கள் என்றால் அப்படி போடுவதில்லை. தாவா சொத்தின் கதவு எண் 145 என்று சொல்லியுள்ளதாக நினைக்கிறேன். அதுக்கு வீட்டு வரி ரசீது யார் பெயரில் இருந்தது என்றால் அன்றைய செயலாளர் பெயரில் இருந்தது. வாதி தரப்பில் ஒப்படைக்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகளை நான் பார்க்கவில்லை. அதுபற்றி யார் பெயரில் இருந்து வந்ததது என்று சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் நகல் வாங்கி பார்த்தேனா என்றால் நினைவில்லை. வழக்கு சொத்தின் வரி விதிப்பு வாதி ராஜகோபால் பெயரில் இருந்து வருகிறது என்றும் வேண்டுமென்றே அதை மறைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக செயலாளர் பெயரில் இருந்தாக பொய்யுரைக்கிறேன் என்றால் தவறு. வாதி இந்தியா கம்யூனிஸ்ட் கட்சியில் மாவட்ட குழு செயலாளர் பொறுப்பில் இருந்தபோது பல பேர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க காரணமாக இருந்தார் என்பது உண்மையா அல்லது பொய்யா என்றால் அது பொய். அக்காலகட்டத்தில் மாநில செயல் குழு உறுப்பினராக செளநதர்ராஜன் பொறுப்பில் இருந்தார். 2012 வருடம் வரை கட்சியில் இருந்தார். பொறுப்பில் எந்த வருடம் இருந்தார் என்று நினைவில்லை. முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்தில் இதுபற்றி என்ன சொல்லியுள்ளேன் என்று நினைவில்லை. வழக்கு சொத்தை கட்சிக்கு எழுதிகொடுக்க சொல்லி வாதியிடம் கேட்டது உண்மைதான். அப்போது மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்தவர் நான் தான் ஆவேன். அக்காலகட்டத்தில் செளந்தர்ராஜ்ன் மாநில செயற்குழு பொறுப்பில் இருந்தார். 2011ம் ஆண்டு கடைசியில் சொத்தை எழுதி

கொடுக்க கேட்டோம். அதற்கு அவர் மறுத்துவிட்டு மனைவியின் பெயரில் பாதி சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக சொன்னார் அந்த ஆவணத்தை பார்த்தோம். 2011 வருடமே வழக்கு சொத்தின் பாதி சொத்தை வாதி அவரது மனைவி பெயரில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சண்முகராஜா சொல்லி தெரியும். அவர் கட்சி உறுப்பினர் ஆவார். கட்சி பொறுப்பில் இருந்த விவரம் நினைவில்லை. அவர் பொறுப்பில் இருந்தார் என்றும் அவர் தவறாக கட்சியை பயன்படுத்திய காரணமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வாதி பொறுப்பில் இருக்கும் போது நீக்கப்பட்ட நபர் என்றால் இல்லை. ஆனால் அவர் நீக்கப்பட்டது உண்மைதான்,. யார் பொறுப்பில் இருக்கும்போது நீக்கப்பட்டார் என்று நினைவில்லை. வாதியின் மனைவியின் பெயரில் தானம் எழுதிகொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட ஆவணத்தை நீக்கப்பட வேண்டும் என்று நாங்கள்கட்சி சார்பாக வழக்கு ஏதும் தாக்கல் செய்தோமா என்றால் நினைவில்லை. வாதியின் சொத்து தான் வழக்கு சொத்து என்பதால் கட்சி சார்பில் இன்று வரை எந்த வழக்கு போடவில்லை என்று வாதி கூறுகிறார் என்றால் கட்சி சார்பில் வழக்கு போடவில்லை. வாதி சமூக விரோத செயல்கள் செய்பவர்கள் கட்சியின் கொள்கைக்கும் நற்பெயருக்கும் கலங்கம் ஏற்படுத்துவர்கள் கட்சி உறுப்பினராக இருந்தாலும் அவர்களை ஆதரிக்க முடியாது என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் வலியுறுத்தினார் என்றும் அதனால் மாநில செயற்குழு உறுப்கினர் தனது அறிவுரையை ஏற்காமல் தனது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுத்துவிட்டார் என்ற ஆத்திரத்தில் வாதிக்கு எதிராக கட்சிக்கும் குழுக்களை உருவாக்கி வாதிக்கு எதிராக செயல்படவைத்தார் என்றால் அது பொய். 3 ம் பிரதிவாதி

மீது அவர் செய்த சமூக விரோத செயலுக்காக 2003 ம் ஆண்டு வாதியால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. அதேபோல் 4 முதல் 6 பிரதிவாதிகள் கட்சியின் நிதியை கையாடல் செய்தவர்கள் என்று வாதி சொன்னால் அது பொய். இதனால் தான் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பகைமை எண்ணம் ஏற்பட்டது என்றால் பொய். 2010 வரை வாதி கட்சியில் மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்தார் என்றால் அது பொய். மாவட்ட செயலாளராக வாதி எந்த தேதி வரை இருந்தார் என்று என்னால் தற்போது சொல்ல முடியுமா என்றால் நினைவில்லை. 2009 மே அல்லது ஜுன் மாதம் வரை மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்தார். இவ்வழக்கு தாக்கல் செய்த தேதி வரை வாதி கட்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் மற்றும் மாநில குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தார் என்றால் அது பொய். 2010 வரை மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்தார் என்றும் அதன்பின்னர் இவ்வழக்கு தாக்கல் செய்யும் வரை மாநில மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்தார் என்ற சங்கதி வழக்குரையில் சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு நினைவில்லை. இந்த தேதி முதல் இந்த தேதி வரை வாதி பொறுப்பில் இருந்த விவரங்களை பதிலிலும் எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லியுள்ளாரே என்றால் அவர் பொறுப்பில் இருந்தது உண்மை. அவரால் எடுக்கப்பட்ட நபர்கள் வாதியின் மீது பகை உணர்ச்சி கொண்டு சொத்தை அபகரிக்க முயன்றதால் இவ்வழக்கு எழுந்தது என்றால் அது பொய். வாதியை எந்த தேதியில் கட்சியில் நீக்கப்பட்டது என்றால் 2012 பிப்ரவரி வாக்கில் நீக்கப்பட்டார். சொத்தை எழுதி கொடுக்க சொல்லி கேட்கப்பட்டு அதற்கு வாதி மறுத்ததால் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் ஆமாம், குறிப்பிட்ட சிலரின் கூட்டுச்சதியால் வாதியை கட்சியில்

இருந்து நீக்கம் செய்யப்பட்டது என்றால் அது பொய்.ஆவணங்களை பார்த்த பின்னர் வாதி அவரது மனைவி பெயரில் ஒரு பகுதி சொத்தை மாற்றிவிட்டார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது உண்மைதான். வழக்கு சொத்து வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை வாதி கட்டுப்பாட்டில் இருந்தது என்பது பொய். மேற்படி கட்டிடத்தில் வாதி பொறுப்பில் இருந்த காலகட்டம் வரை கட்சி கூட்டங்கள் நடந்தது என்றால் உண்மை. அதற்காக வாதி வாடகைகள் பெற்றுக்கொண்டார்.மீண்டும் சாட்சி கூட்டத்திற்காக வாடகை வாங்கவில்லை என்றும் வேறு நபர்களுக்கு வாடகைக்கு விட்டு வாடகை வாங்கினார் என்று கூறினார்.வாதியை கட்சியில் நீக்கிய பின்னர் கட்டிடங்களில் இருந்து எங்களை வெளியேற சொன்னார் என்றால் ஆமாம்.

( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

Sd/Thiru. M. Balamurugan
சார்பு நீதிபதி, மேட்டூர்.